தனிப்பிரதி 1 அணா ஆண்டு சந்தா ரூ. 5. REGD. NO. M. 4455.

திராவிடநாடு

ஞாயிறு வெளியீடு.

ஆசிரியர்
C. N. அண்ணாதுரை M. A.,

"காணா மானிடரைக் கனம் செயல் முறையா?
கடவுள் எனும் மயக்கில் கவிழ்ப்பது முறையா?"
[கவி பாரதி தாசன்]

மலர் 1 || காஞ்சிபுரம் 26—7—42 சித்திரபானு—ஆடி 11—ஞாயிறு || இதழ் 21

இருவீரர்-ஒருதாசர்!

பரதன்.

காந்தி, யார்? காந்தியார், யார் தெரியுமோ? அவர் ஓர்

வர்ணாச்சிரம பித்தர் இந்துமத பக்தர்
சாத்திர வெறியர் வைதீகப் பிரியர்
கற்பனைக் கிறுக்கர் மனிதாபிமான எதிரி
தொழிலாளர் துரோகி சமதர்ம சத்ரு
பார்ப்பன தாசர் முதலாளித் தரகர்
ஏகாதிபத்ய ஏவலர் தீண்டாதாரின் பகைவர்
ஏழைகளின்வைரி பெண்சுதந்திர விரோதி

என்று வீரன் வெகுண்டுரைத்தான்.

"கோபம் வேண்டாமப்பா வீரா! நிதானம் எதிலும் பெரிது. பொறுமை வேண்டும்" என்றேன் நான்.

"மிருகங்களிலே பொறுமையையே பூஷணமாகக் கொண்டுள்ள கழுதையைக் கண்டவர் அடிப்பர், கிட்டே வந்தால் கொலை என்று ரோஷத்தோடு உலவுகிறதே புலி, அது இருக்கும் திக்கையும் நெருங்குவதில்லை மக்கள். பொறுத்துப் பொறுத்து நாம் கண்ட பலன் என்ன தெரியுமோ, தோல் கடித்துவிட்டது! என்றான் வீரன்." கடவுளைப்பற்றி எவ்வளவோ ஆபாசமான கருத்துரைகளைப் புராணிகன் கூறக்கேட்டும், நம்பி நம்பி, மனதைக் கெடுத்துக் கொண்ட மக்கள், வேறு எதை நம்புவதும் ஆச்சரியமில்லையே தோழனே! இவ்வளவு மூடபக்தி இங்குஇல்லையானால் நாட்டு விடுதலைக்கு இந்தக் காந்தியார் கூறுவதும், அவர்கூறுவதாக அவர் அடியார்கள் கூறுவதும் கேட்டு மக்கள் அரை விநாடி நம்புவார்களா? நான் கேட்கிறேன் நீதான் பதில்சொல்லு பார்ப்போம். காந்தியாருக்கு இந்த நாட்டிலே செல்வாக்குக் கிடைத்ததைப்போலே, வேறு எந்தத் தலைவருக்காவது கிடைத்ததா?" என்று கேட்டான் வீரன். "இல்லை!" என்றேன் நான் 'இங்கு மட்டுமல்ல! வெளிநாடுகளில்கூட காந்தியாருக்கு மக்கள் தந்ததைப்போல வேறு எந்தத் தலைவருக்கும், சுலபத்திலே அபாரமான செல்வாக்குக்கிடைத்ததில்லை என்றான்.

உண்மைதான்! ஹிட்லர் முசோலினிகூட, தலைவர்களாவதற்காகப் பட்ட கஷ்டங்களும், அடைந்த தொல்லைகளும் அபாரம். மேலும் அவர்கள் பலாத்காரத்தால் தலைவர்களானார்கள். காந்தியாரோ, கண்மூடிக் கண்திறப்பதற்குள் தலைவரானார், சில மாதங்களுக்குள் மகாத்மாவானார், மக்களின் கண் கண்ட தெய்வமானார். அவர் வாக்கை வேதமெனக் கொண்டனர். அவரை வழிபட்டனர். துதித்தனர். துதியாதவரைத் துரோகி என்றனர். பணம் எவ்வளவு! பரிவாரம் எவ்வளவு! பத்திரிகை பலம் எத்தனை! காந்தியாருக்கு வந்ததுபோல் செல்வாக்கு யாருக்கும் வந்ததில்லை. காந்தியார் அரசியலிலே நுழைந்தது இன்று நேற்றல்ல. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகிறது. அவர் பிரவேசிக்கும்போது இங்கு இரு இயக்கங்களே உன்னதமான நிலைமையில் இருந்தன. ஒன்று நிபுணர்கள், சட்ட ஞானிகள், மேனாட்டவரைச் சரிசமமாக வாதிட்டு வெல்லக்கூடிய விற்பன்னர்கள், கொண்ட லிபரல் (Liberal) கட்சி. மற்றொன்று, வெளிநாட்டவனை விரட்ட, உயிரை இழக்கவும் சித்தமாகி, கொலை கொள்ளை ஆகியவற்றுக்கும் துணிந்து, துப்பாக்கியும் கையுமாக மறைந்து திரிந்து, வெள்ளையர் உயிரைச் சூறையாடிய பயங்கர இயக்கத்தினர். (Terrorist Movement) முன்னவரின் இடம் பாராளுமன்றம், பொதுமேடை, பத்திரிகாலயம், மாளிகை, மண்டபம், கவர்னர் முதலியவர்களின் நிலையங்கள். புரட்சி இயக்கத்தவர் இரகசியமாக வேலைசெய்தனர். இன்ன அதிகாரியை இன்று இத்தனை மணிக்கு இன்ன இடத்திலே இன்னவர் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்துவது என்ற இத்தகைய திட்டமே அவர்களுடையது. பெருவாரியான மக்கள் இந்த இரு இயக்கங்களிலும் சேரமுடியாது ஒதுங்கினின்றனர். ஒன்றில் சேருவதோ உயிரிழக்க நேரிடும், மற்றொன்றோ, மேதாவிகளின் கொலுமண்டபம்! எனவே, பாமரர் வாய்பிளந்து நின்றனர். படித்த கூட்டம் இருபிரிவாகி, இந்த இரண்டு இயக்கங்களிலும் வேலைசெய்து வந்தன.

வந்தார் காந்தியார், இரண்டிலும் சேரமுடியாது இருந்தகூட்டத்தைக்கூவி அழைத்தார், "மேதாவித்தனமும் வேண்டாம், உயிரை இழக்கும் ஆபத்தான போக்கும் வேண்டாம், என்னுடன் சேருங்கள், சுலபமான்வழி" என்று கூறினார், "படிப்புவேண்டாம், பண்பு வேண்டாம், யுக்தி புத்தியுங்கூடவேண்டாம், என்னை நம்புங்கள்போதும்" என்றுரைத்தார். என்ன? என்ன? என்று கேட்டனர் பாமரர். "பிரமாதம் ஒன்று

மில்லை. இதோ இந்தக்கைராட்டையைச் சுற்றுங்கள். வெள்ளையருடன் ஒத்துழைக்கவேண்டாம்" என்று கூறினார். லிபரல்கள் நுண்ணறிவுகேட்டனர், பயங்கர இயக்கத்தினர் உயிரை உயில் எழுதச்சொன்னார்கள். காந்தியாரோ, புத்தி, தியாகம் இரண்டையும் கேட்கவில்லை, கூச்சலிடச்சொன்னார், ராட்டைச்சுற்றச்சொன்னார், சிறைவாசம் செய்யென்றார், இவ்வளவுதான் அவர் கேட்டது. பயங்கர இயக்கத்தில் இருந்தாலோ, சிக்கிக்கொண்டால், தூக்குமேடை ஏறவேண்டும்! லிபரல் கட்சியிலிருந்தாலோ, சபை நடுவே நின்று சான்றோர் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷய விளக்கங் கூற வேண்டும். காந்திக்கூட்டத்தில் சேருவதென்றாலோ, கைமுதல் தேவையில்லை. யாரும் சேரலாம்! எவ்வளவு பாமரராக இருப்பினுஞ்சரியே! இந்தத்தந்திரமே காந்தியாருக்குக் கூட்டத்தைச் சேர்த்துக்கொடுத்தது. இத்தகைய கூட்டத்தைச் சுலபத்திலே வசியப்படுத்தவும் அவரால் முடிந்தது. அதற்காக அவர் மதவேடமணிந்தார். அதுமக்களிடை மனமயக்கத்தை உண்டாக்கும் மார்க்கமாயிற்று. பார்ப்பனசமூகம், இவரைப் பயன் படுத்திற்று, இவரும் அதற்கு இணங்கினார். உடனே மோகனதாசர் மகாத்மாவானார், ஆமதாபாத் வாசம்போய் ஆஸ்ரமவாசம் கிடைத்தது, ஆப்பிரிக்காகாந்தியார், ஆரியரின்இரட்சகரானார், பத்திரிகைகள் பாடின, பிர்லா, பஜாஜ்கூட்டம் பணஉதவி செய்தன, நம் கண்முன்பாகவே புராணம் எழுதப்பட்டு, காந்தியார் கடவுளவதாரமாக்கப்பட்டார். ஆனால் இத்தகைய பணபலம், பார்ப்பன பலம், மதபலம், பத்திரிகை பலம், மகாத்மாபட்ட பலம், இவைகளுடன் ஆத்மசக்தி பெற்று, இருபத்தைந்து ஆண்டுகள் வேலைசெய்து, இலட்சக்கணக்கான மக்கள் கண்ணைமூடிக்கொண்டு பின்பற்றுகிறார்கள் என்ற பெருமையான பேச்சையும் பெற்று, ஆங்கில அரசாங்கமே அடங்குகிறது என்று ஜம்பம் பேசும் பூசாரிகளைப்பெற்று, காந்தியார் வேலை செய்து கண்டபலன் சூன்யம். சாதாரண ஆத்மாக்கள், இவ்வளவு அபாரமான செல்வாக்கோ, பணபலமோ, பெறாமல், கள்ளத்தனமாகப்பத்திரிகைகள் நடத்துவதும், காசுக்குவழியின்றித்திண்டாடுவதும், சர்க்கார் ஏவிய கொலையாளிகளிடம் சிக்குவதும் தப்பித்துக்கொள்வதும், வாழ்க்கையிலே சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு, விரோதிகளின் வலையை அறுத்தெறிந்து கொண்டு, கூரியவாள், கொடியசதி, மரணதண்டனை, கடுஞ்சட்டம் கூட இருந்து குடிகெடுக்கும் துரோகிகள் தந்ததொல்லை, இவ்வளவையும் சமாளித்து, இரவுபகல் உழைத்து, வறுமையில்வாடி, பட்டினியில் பதைத்து, நாடு கடத்தப்பட்டும், கள்ளிரவில் விரட்டப்பட்டும், மாறுவேடம் பூண்டுதிரிந்தும் பலப்பல ஆண்டுகள் கொடிய சிறையிலே தள்ளப்பட்டுக்கிடந்தும், பாடுபட்டு, தமது இலட்சியங்களிலே பெற்றவெற்றியில், ஆயிரத்தில் ஓர்பங்கு, காந்தியார் பெற்றார் என்று, காந்தி பக்தர்கள், நெஞ்சிலே கை வைத்து, நேர்மையில் நாட்டம்வைத்து, கூறமுடியுமா என்று கேட்கிறேன்.

கடந்த ஜெர்மன்சண்டைக்குப் பிறகு, பலநூற்றாண்டுகளாக, அடிமைக்குழியிலே உழன்று, ஆபாசத்தின் இருப்பிடமாகி, மக்களைச் சித்திரவதை செய்யும் இடமாக இருந்த **ரஷியா**வை, 'சமதர்மநாடாக்கி, "அன்று அவன் எழுதியது" என்ற அவலச்சொல்லை அழித்து, மக்களை ஒப்பப்பர் ஆக்கிய, வீரன் V. I. **லெனின்**, சாதாரண ஆத்மா! அல்லலையே கண்ட ஆத்மா! ஆபத்தை அணைத்துக்கொண்டு வாழ்ந்த ஆத்மா! பசியும் பட்டினியும் அவனுக்குப் பரிவாரம்! அந்த "அன்னக்காவடி" செய்துகாட்டிய அற்புதத்தை ஆயிரம் மகாத்துமாக்கள் ஒற்றைக்காலால், ஊசிமுனைமேல் நின்று தவங்கிடந்தாலும் செய்துகாட்ட முடியுமா? அத்தகைய லெனினுக்கு, அவரது வாழ்நாளிலே, காந்தியாருக்கு நமது மக்கள் தந்த அளவு ஆதரவு தரவில்லை! எங்கும் எதிர்ப்பு! எவ்வளவு ஆபத்து! ஜாரின் கொடுமை! பட்டாளங்களின் பதட்டம்! மதக்கிறுக்கர்களின் தொல்லை! சீமான்களின் சீற்றம்! தோழர்களிலே சிலருடைய துரோகசிந்தனை! இன்னோரன்னபிற இடையூறுகள்! தலைகாட்டினால், தண்டனை! பத்திரிகை வெளியிட்டால் சிறை! என்று கொடுமை இருந்தது.

இம்மென்றால் சிறைவாசம், ஏனென்றால் வனவாசம், என்றிருந்த ரஷியாவிலே, நெருப்பு மேடை மீது நின்று, முட்புதரிலே நடந்து, புலிக்குகையிலே நுழைந்து, பாம்புப்புற்றிலே கையை நுழைத்து, இரும்பு முள்வேலியிலே, ஜாரின் ஆட்சியிலே, லெனின் வேலைசெய்து, உலகிலே உன்னதமான ஓர் புதுஅரசை, மக்கள் மாட்சியை, நிறுவினார். லெனின் கண்ட ஆபத்திலே, கடுகளவும் காந்தியார் கண்டாரில்லை. அவர் கண்டதெல்லாம், 144! சிறை! சிறையிலே வழக்கமான ஆரஞ்சுரசத்துக்கோ ஆட்டுப்பாலுக்கோ, நிலக்கடலைக்கோ, நேர்த்தியான படுக்கைக்கோ குறைவுகிடையாது. டாக்டர்கள் வருவர், பரிசோதிப்பர், சர்க்காரே அறிக்கை வெளியிடுவர்! கஸ்தூரிபாய்காண்பார், களிப்பார். பிர்லாவும் பஜாஜும் போவர், பாதகாணிக்கை தருவர். இதற்குப் பெயர் சிறைவாசம்! இது காந்தியார் கண்ட "காங்கொணாக்" கஷ்டம்! லெனின்பட்ட கஷ்டத்தோடு இதனைச்சற்று ஒப்பிடுங்கள், நெஞ்சிருப்பின், நேர்மையிருப்பின், உண்மையை உரையுங்கள், இருவரிலே, எவரய்யா, கர்மவீரன், அஞ்சாநெஞ்சன், ஆற்றலுடையோன். பாதிரிகள் பயங்காட்டினர், பணக்காரர் சுட்டிகாட்டினர், லெனினுக்கு! இங்கோ, மகாத்மாவே! என்று மதவாதிகள் மண்டியிட்டனர், சாந்தசொரூபியே என்று சீமான்கள் வாழ்த்தினர், இந்தியத்தலைவரே என்று சர்க்கார் அர்ச்சித்தனர். கலிகால அவதாரமே என்று மக்கள் பூசித்தனர்! மதவாதிகள் மண்டியிட, சீமான்கள் வாழ்த்த, சர்க்கார் அர்ச்சிக்க, மக்கள் பூசிக்க, கொலுவீற்றிருந்து, காந்தியார், கண்டது என்ன, தந்தது என்ன? ஏதோ விரலைமடக்குங்கள் பார்ப்போம். அதோ அந்த ரஷியாவை நினையுங்கள்! ரசாபாச மடம், நயவஞ்சகர்களின் நடனசாலை, கொடுங்கோலனின் கொலுக்கூடம், மதக்கேடரின் கூடாரம், மக்களைக் கசக்கிப்பிழியும் கவலைக்களம், ரஸ்புட்டினின் லீலாவிநோத கொலுமண்டபம், ஜாரின் தர்பார் கிரஹம்! ஒருலெனின், ஆத்மசக்தியோ, அந்தராத்மாவின் துணையோ பணமூட்டைப்பலமோ இன்றி உழைத்துக், கஷ்ட நஷ்டத்தைக் கனிரசம் கரும்புரசமெனக்கொண்டு பணியாற்றியதால், சமத்துவம்செழிக்கும் நாடாக்கி விட்டார், உலகம் பார்த்துக்கொண்டிருக்கையிலே! மலைபோல் திரண்டுகிடந்த மமதையை மாய்த்துச், சழுக்கரைச்சாய்த்து ஜாராட்சிசரியச்செய்து முதலாளித்வம் முறியச்செய்து, புத்துலகு அமைத்துக்காட்டினார்! இவருடைய வெற்றி எங்கே! காந்தியாரின் கதை எங்கே!! ஒப்பிட்டுப்பாருங்கள், உண்மை எதுவெனத் தெரியுங்கள்!

ஐரோப்பாவிலே ஓர் நோயாளியாக இருந்த துருக்கியை, நொடியிலே வல்லரசாக்கினாரே முஸ்தபா கமால், அவர் ஆஸ்ரம வாசியா, அந்தராத்மா வந்து வந்து பேசிடும் பேர்வழியா! துருக்கி, முஸ்தபாவின் சொல்கேட்டு, காந்தியாரின் சொல்கேட்டு இங்கு மக்கள் சொக்கிவிட்டதைப்போல சொக்கிவிட்டனரா? காந்தியாருக்கு உடனடியாக ஆதரவுகிடைத்ததுபோல், முஸ்தபாவுக்குக் கிடைத்ததா! இல்லை! எதிர்ப்பு! எதிர்ப்பு! ஆபத்து! கஷ்டம்! சங்கடம்! சஞ்சலம்! இவைகளைக்கடந்தே வெற்றிபுரி சென்றார், வீரத்துருக்கி வல்லரசை நிறுவிக்காட்டினார். இத்தகைய வீரர்களுடன், காந்தியாரின் கதையைச்சற்று ஒப்பிட்டுத்தான் பாருங்கள் தோழர்களே, உண்மைவிளங்கும்.

காந்தீயம், தனது கடைசிச்சொட்டு விஷத்தைக் கக்குகிறது, சரியான, நெருக்கடி முற்றியுள்ள நேரமாகப்பார்த்து! தோழர் சுபாஷ் சந்திரபோஸ், போர்

(9-ம் பக்கம் பார்க்க)

வருங்காலம்!

[திண்டுக்கல் அ துரைச்சாமி எழுதுவது]

1. காலச்சக்கரம் சுழலும் வேகத்தினாலும், உலகம் அடைந்துவரும் மகத்தான மாறுதல்களினாலும் வருங்காலத்தில், 36 கோடி மக்களைக்கொண்ட நமது இந்திய பூபாகத்தினர், முஸ்லீம்ஸ்தான் ஆரியஸ்தான். திராவிடஸ்தான் என மூன்று பிரிவுகளாகப் பிரிந்து, அந்தந்த நாட்டுத் தலைவர்கள் ஆட்சி நடத்தப் போகிறார்கள். அவ்வமயம் நம் திராவிடஸ்தானில், திராவிடர்களின் ஆட்சியின்கீழ் இந்துக்கள், முஸ்லீம்கள், கிருஸ்தவர்கள், திராவிடர்கள் என்றபேதமும் முதலாளிகள், தொழிலாளிகள், ஏழைகள் என்ற பேதமும், அபலைகள் பேதைகள் என மாதர்களை அடிமை விலங்குகளால் பிணைக்கப்பட்டிருக்கும் கொடுமைகளும், நாளடைவில் திராவிடத்தலைவர்களின் பிரசாரத்தால், மக்கள் பிரமிக்கும்படி தடுத்துவிடுவார்கள்.

2. திராவிடமக்களை இந்துமதஸ்தர்களென்றும், அம்மதத்திற்கு ஆதாரமாக வேதம், ஸ்மிருதி, ஆகமம், இதிகாசம், புராணம், சாஸ்திரம், பஞ்சாங்கம், சரியை, கிரியை, யோகம். ஞானம், உத்திராட்சம், விபூதி, நாமம், பூணூல், ஜெபம், மந்திரம், பூசை இம்மாதிரியான நியதிகளைக்கொண்டு மக்களைஏமாற்றிப் பிழைக்க வகைதேடும் மதபக்தர்களையும், இயற்கை எய்தினோரை மோட்சலோகத்துக்கு அனுப்புவதாகச் சொல்லி அரிசி, காய்கறி, பருப்பு, செருப்புகள் வாங்கும் வானசாஸ்திர பக்தர்களையும், கடவுள் பெயரால் பொய்யும் புளுகும் சொல்லி மக்களை மாக்களாக்கிய மகாத்மாக்களையும், கிழிந்த பஞ்சாங்கமும் தர்ப்பையுங்கொண்டு திராவிடர்களை அடக்கி ஆள நினைக்கும் சனாதனக்கும்பல்களையும்; உழுதுபயிரிட்டுப் பிழைக்க மனமில்லாமல் மக்கள் உழைப்பைஎதிர்பார்க்கும் சங்கராச்சாரிகளையும், திராவிடர் ஆட்சியிலே பயங்கரமான எதிரிகளென்று கருதி, அவர்களை சிறைவாசத்துடன் அவரவர்கள் உடல்வலிமைக்குத் தகுந்தபடி மண் வெட்டவோ, கல்உடைக்கவோ, குளங்கள் வெட்டவோ, ரோட்டுப் போடவோ இவைபோன்ற இன்னும்அநேக வேலைகள் கொடுக்கத்திட்டம்வகுப்பார்கள். அதுகண்ட அக்கும்பல்கள் செத்தோம்பிழைத்தோ மென்று ஓடிவந்து, நாங்கள் இதுநாள்வரையிலும் உங்களை ஏய்த்துப்பிழைத்தது தப்பிதம் தப்பிதமென்றும், அபயம் அபயமென்றும், கெஞ்சிக்கூத்தாடி, நமது அரசாட்சியினரிடம் மன்னிப்புக்கேட்டு அவர்களும் நம்முடன் சமத்துவமாய்ச் சகோதர்களாய் வாழ்ந்து வருவார்கள்.

3. திற்க, அரந்தாங்கி, பட்டுக்கோட்டை கொரநாடு, கோயம்புத்தூர், காஞ்சி, சேலம், ஈரோடு, மதுரை, அருப்புக்கோட்டை, சின்னாளபட்டி இன்னும் அநேக ஊர்களிலிருக்கும் கைத்தறிநெசவாளர்கள், வேலையில்லாத் திண்டாட்டத்தால், குடும்பங்களுடன் பிச்சைக்கேகுவதற்குக் காரணம், அந்நிய மாகாணத்திலிருந்துவரும் ஆலைத்துணி. கதரென்ற பெயருடன் வரும் வடநாட்டு மில்கதர், இவைகள்யாவும் பிர்லா, பஜாஜ் போன்ற கோடீஸ்வரர்களின் மில்களில் தயாராகிவருபவைகள். இவைகள் நம்நாட்டுக்குள் வந்து குவிந்துவிட்டபடியால்தான், உள்நாட்டு கைத்தறி நெசவாளர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுகிறதெனத் தெரிந்து, அன்னிய நாட்டிலிருந்து அல்லது வெளிமாகாணத்திலிருந்து வரும் சகலதுணிகளுக்கும், தீர்வை (டூட்டி) ஏற்படுத்தி நம்நாட்டுக்கைத்தறித் துணிகளுக்குக் கிராக்கி ஏற்படும்படிசெய்து, நெசவாளர்களின் கஷ்டத்தை நிவிர்த்திப்பார்கள்.

4. குறிப்பிட்ட காலத்திற்குள் மக்கள் சகல துறைகளிலும் முன்னேற்றமடைந்து வாழ்வர். அவ்வமயம் வீரஞ்செறிந்தவாலிபர்களைக் காலாட்படையினர், குதிரைப்படையினர், கப்பல் படையினர், பீரங்கிப் படையினர், விமானப்படையினர், எனவகுத்து. அவர்களுக்குப்பயிற்சி அளித்து, ஏகாதிபத்திய வெறிபிடித்தவர்களையும் பாஸிச நாஸிசக்கொள்கையினரையும், நம் திராவிட நாட்டில் கால்வைக்கவிடாமல் நமது இராணுப்வபடையினர், அணிவகுத்து நின்றுநாட்டைப் பாதுகாப்பார்கள். அதுகண்ட மற்ற நாட்டார்கள், திராவிடர்வாழும் நாடு, பொன்னாடு, வீரர்கள் பிறந்த நாடு, பலசாலிகள் பிறந்த நாடு, உலகத்திற்கு நாகரிகத்தையும், கலையையும் அளித்த நாடு, என்றுபுகழும்படி அழியாக்கீர்த்தியுடன் என்றென்றும் நீதிதவறாமல் நமது திராவிடத் தலைவர்கள் ஆட்சிபுரிவார்கள் என்பது திண்ணம்.

தோழர்கள் ஆதரவு

"திராவிட நாடு" வளர்ச்சி கருதி, தோழர்கள் கரூர், K. N. ஷண்முகம் தமிழர் சிற்றுண்டிசாலை. K. R. பழனியம்மாள், இங்கர்சால், ஆகியவர்கள் ஒவ்வோர் ரூபாயும். தொட்டியம் தோழர் சிரங்கம் 1 ரூபாயும், தோழர் T. N. வேணுகோபால் திருப்பத்தூர், குழந்தை பிறந்ததை முன்னிட்டு 1 ரூபாயும் தந்து உதவி செய்துள்ளனர்

தாமல் கிராமத்தில் தமிழர் திருமணம்

காஞ்சிக்கடுத்த தாமல் கிராமத்தில், 15—7—42 காலை தோழர் சின்னநாயகர் திருக்குமாரி ஞானம்பாளுக்கும், தோழர் காயத்திரிக்கும், வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. சடங்குகளின்றி, தோழர் C. N. அண்ணாத்துரை மேற்படி திருமணத்தை இரண்டே நிமிஷத்தில் நடத்திவைத்தார். பிறகு உள்ளூர் வெளியூர் தோழர்கள் கொண்ட கூட்டத்தில் A. K. தங்கவேலர், T. P. S பொன்னப்பனார், C. K. குப்புசாமி, C. பார்த்தசாரதி, C. P. சின்னராஜா, காஞ்சி கலியாணசுந்தரம், வெங்கட்ராமன், ஏழுமலை, இரங்கசாமி நாயகர், C. N. அண்ணாதுரை ஆகியோர் சீர்திருத்தம் என்பது பற்றிப் பேசினர். தோழர் சுந்தரேசன், பாரதிதாசன் கீதங்களைப் பாடினார். இந்தப்பக்கத்திலேயே சீர்திருத்த முறையிலே நடந்த திருமணம் இதுவே முதலாவது. தோழர் சின்னநாயகரின் உறுதியைப் பலரும் பாராட்டினர்.

மகிழ்ச்சி

திருவத்திபுரம் நமதியக்கத் தோழர் கந்தசாமி அவர்களை, செய்யாறு தாலூக்காவுக்கு, தேசிய மூன்னணி கௌரவ டிவிஷனல் ஆர்கனைசராக சர்க்கார் நியமித்துள்ளனர்.

பாக்கு அரைக்கும் மெஷின்

கையினால் சுற்றி, பாக்கு அரைத்துக் கொள்ளும் மெஷின் ஒன்று நம்மிடம் விலைக்குக் கிடைக்கும். விலை 175 ரூபாயாகும். விவரத்திற்கு எழுதவும்.

மெஷின்
C/o
திராவிடநாடு நிலையம்,
சின்னக்காஞ்சீபுரம்.

அஞ்சா நெஞ்சினர்

1. வீர விமானி!

இந்தப் போரிலே ஈடுபட்டுள்ளவர்களிலே சிலருடைய வீர தீரத்தை விளக்கும் தகவல்கள் வெளிவந்துள்ளன. அஞ்சா நெஞ்சினர் சிலரின் வரலாறு கேளுங்கள்.

ப்யுனிகேன் என்ற வீர விமானியின் சோக மரணம், வீரர்கள் கண்களில் நீர்புரளச் செய்துவிடக்கூடியது. இவருக்கு வயது 21-தான்! வீரதீரமான போர்புரிந்து இதுவரை 32 ஜெர்மன் விமானங்களை வீழ்த்தியிருக்கிறார். சின்னாட்களுக்கு முன்பு இவர் விமானத்தை ஓட்டிக்கொண்டு பிரான்சு நாட்டிலே உள்ள ஜெர்மன் இராணுவநிலையங்களைத் தாக்கிவந்தார். திடீரென மெஷின்கன் கொண்டு ஜெர்மன் வீரனொருவன் விமானத்தை நோக்கிச் சுட்டான். அந்தக் குண்டு விமானத்தின் ரேடியேடரைத் தாக்கிற்று. விமானம் உடனே சுழல ஆரம்பித்துவிட்டது. உடனே கூட இருந்த தோழர்கள், "தோழரே! என்னசேதி?" என்று கேட்டனர்.

"சேதி என்னஇருக்கிறது தீர்ந்துவிட்டது? அவ்வளவுதான்!" என்றார் விமானி.

விமானம் கீழே விழத்தொடங்கிற்று. கடலிலே குதித்துவிடுவதென்று தீர்மானித்தான் விமானி. ஆனால் குதிப்பதற்குள் விமானம் அவனை மோதிற்று. மோதவே வீரன் உயிர் நீத்தான். விண்ணிலே வட்டமிட்ட தோழர்கள் கவலையுடன்கடலைப்பார்த்தனர். கடல் எண்ணெய்மயம்! என்னசெய்வது! சோகித்தனர். கோபத்தோடு பாய்ந்தனர், ஜெர்மன் மெஷின்கன் நிலையத்தைத் தூள்தூளாக்கித்தள்ளித் தமது துயரத்தைத் தீர்த்துக்கொண்டனர். வீர மரணமடைந்த ப்யுனிகேனின், மேலதிகாரி, அவனது வீரதீரத்தைப் பாராட்டிப் புகழ்கிறார்.

2 ஜோசிங்ஸ்!

நாஜி ஆட்சியை ஏற்றுக்கொள்ள மறுக்கும் மக்களை, நாஜிகள், நார்வேயில் 'ஜோசிங்ஸ்' என்று அழைக்கிறார்களாம். நார்வே நாட்டுக்குச் சுதந்திரத்தை மீண்டும் ஸ்தாபிக்க வேண்டுமென்றுழைக்கும் வீரர்கள், இந்த வசைமொழியை புகழ் தரும் பட்டமென்று கொண்டு "ஆமாம்" நாங்கள் ஜோசிங்ஸ்தான்" என்று கூறுகின்றனராம்.

ஒரு நாள், நார்வேயில் மோட்டார் பஸ்ஸிலே, ஏகக்கூட்டம். ஒருவர் ஏறவந்தார். "இடமில்லை" என்று கண்டக்டர் கூறிவிட்டான். உடனே அந்த மனிதர், 'நண்பரே, நான் ஒரு "ஜோசிங்" என்றானும், உடனே இடம் கிடைத்து விட்டதாம். இப்போது ஜோசிங் என்ற பதம் நார்வேயில் வேகமாகப் பரவிவருகிறது.

3. எவ்வளவு கொடுமை!

செக்கோஸ்லோ வேக்கியாவின் மாஜி சான்சலர் டாக்டர் சாமால் என்பவரை நாஜிகள் கொடுமை செய்ததை விளக்கி வேதனைமிகும் வரலாறு வெளிவந்திருக்கிறது. பெர்லின் சிறையில் அவரைப் போட்டு அடைத்து இராணுவ உடுப்புகளுக்கு பொத்தான் தைக்குமாறு உத்திரவிட்டார்களாம். ஒரு நாளைக்கு இத்தனை பொத்தான்கள தைக்கவேண்டுமென்று கட்டளையாம். ஒரு பொத்தான் தைக்காவிட்டால், சவுக்கடி! இத்தகைய கொடுமையை அனுபவித்துக் கலங்கி, மூளையும் குழம்பி அந்த முதியோர் சிறையிலேமாண்டு போனார். சாகும் வரையில் நாஜிகளுக்கு மட்டும் தலை வணங்க முடியாது என்று கூறினாராம் இந்த அஞ்சா நெஞ்சினர்.

முத்தமிழ் மகாநாடு, மதுரை.

ஆகஸ்டு 1, 2, 3, தேதிகளில் "முத்தமிழ் மாநாடு" மதுரையில் மீனாட்சிஅம்மன் கோயில் திருக்கல்யாண மண்டபத்தில் நடைபெறும்.

இயல் மாநாடு திறப்பாளர்:—

இராமனாதபுரம் சேதுபதி மன்னரவர்கள்.

தலைவர்:—

சுவாமி விபுலானந்த அடிகள்.

இசைமாநாடு திறப்பாளர்:—

டாக்டர் ஏ ஜோதிபாண்டியன் அவர்கள்.

தலைவர்:—

இசைச்செல்வம் திரு டி இலக்குமண பிள்ளை பி. ஏ. பி. எல்

நாடக மாநாடு திறப்பாளர்:—

திரு டி ஸி. சீனிவாச அய்யங்கார், பி. ஏ. பி எல், எம். எல். ஸி.

தலைவர்:—

ராவ்பகதூர் பி. சம்பந்த முதலியார், பி. ஏ. பி. எல்.,

பிரதிநிதிக் கட்டணம் ரூ. 3—0—0.

(மூன்று நாள் சாப்பாடு உள்பட)

பார்வையாளர் கட்டணம் இயல், 0—4—0,

இசை 0—8—0, நாடகம் 0—4—0.

சொற்பொழிவுகளும் இசை விருந்துகளும் நடக்கும்.

தங்கள்,

எல். கிருஷ்ணசாமி பாரதி,

பொதுச் செயலாளர்.

மணிமேகலை-ராமநாதன்

தமிழ்த் திருமணம்

15—7—42 புதன் காலை சிதம்பரத்திற்கடுத்த ம. புளியங்குடியில் சீர்திருத்தத் தோழர் திரு. அ. இராமநாதனுக்கும் சிதம்பரம் பச்சையப்பன் உயர் நிலைப் பள்ளி வரலாற்று ஆசிரியர் திரு. திருவேங்கிட நயினார் அவர்கள் மகள் திரு மணிமேகலைக்கும் பண்ணுருட்டி தமிழாசிரியர் திரு. பக்கிரிசாமி நயினார் அவர்கள் சீரிய தலைமையில் திருமணம் புரோகிதனின்றி திருந்திய முறையில் சிறப்புடன் நடந்தேறியது. மணமக்களுக்கு உறவினரும் நட்பினரும் பல பரிசுகள் வழங்கினர். காலை உணவுகளுக்குப்பின் நடந்த பாராட்டுக் கூட்டத்தில் திரு. பக்கிரிசாமி நயினார் அவர்கள் தலைமை தாங்க பலரிடமிருந்து வந்த வாழ்த்துச் செய்திகள் படிக்கப்பட்டன. சீர் திருத்தத் திருமணத்தை விளக்கியும் அதை மக்கள் பின்பற்ற வேண்டிய அவசியத்தை வற்புறுத்தியும் திருவாளர்கள் புலவர். சிங்காரவேல் சுவாமிகள். சு பூவராகன். வை இராமச்சந்திரன் முதலியவர்களால் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டு மணமகள் தந்தையாரால் அனைவர்க்கும் நன்றி கூறப்பட்ட பின் கூட்டம் இனிது முடிந்தது.

திருமணத்தை முன்னிட்டு 'விடுதலை' 'திராவிட நாடு' செய்தித் தாட்களுக்கு ஒவ்வொருரூபாயும். சிதம்பரம் தாலூகா வன்னிகுல க்ஷத்திரியர் கழகத்திற்கு மணமகன் மணமகள் சார்பாக இரண்டு ரூபாய்களும் நன்கொடையாக வழங்கப்பட்டன.

திருமண நிச்சயம்

ஹிஜ்ரி 1361 வருடம், ரஜப மாதம் 1942 வருடம் ஜூலை மாதம் 17ந் தேதி வெள்ளி இரவு 9-30 மணிக்கு காணகூால். வியாபாரி ஜனாப் M. அப்துல் ரஜாக் அவர்களின் மைத்துனர் ஜனாப் அ. மு உமர் அவர்களின் திருக்குமாரி அல்மர்ஹூம் அவர்களை, குப்பபிச்சை அவர்களின் குமாரர் முகமதுஹனீபா அவர்களுக்கு விவாகம் செய்விப்பதென பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டது.

தொடர் கதை

* கலிங்க ராணி *

——[சோமியன்.]——

(முன்பு:— குலோத்துங்க சோழனின் குதிரைப்படைத் தலைவன் வீரமணி. அரண்மனைத் தோழி நடனராணியைக் காதலிக்கிறான். காட்டுக்கு ஒருநாள் வேட்டைக்குச் சென்ற மன்னன், அங்கிருந்து கச்சி செல்கிறான், வீரமணி முன்னதாகவே கச்சிநகர் போகிறான். அரண்மனைப் பூங்காவிலே நடனராணி ஆடிக்கொண்டிருக்கையிலே.................)

நடனராணி, பதுமா என்ற பாத்தையின் வளர்ப்புப்பெண். வனப்பும், எழில்பெற்ற மனமும், இசைத்திறனும் நாட்டியக்கலைத்திறனும் ஒருங்கே பெற்றவள். மன்னன் மனமகிழவும், மற்றோர் கொண்டாடவும், மாதவியோ என்று கலைவல்லோர் போற்றவும், வாழ்ந்துவந்தாள். அவளது அரியகுணம், அந்தப்புரத்துக்கு எட்டி, அம்மங்கையின் கருணைக்கண்கள் நடனராணி மீது செல்லும்படி செய்தன. நடனராணி அம்மங்கையின் ஆருயிர்த் தோழியானாள். பதுமா, தன் வளர்ப்புப்பெண்ணின் மனப்பாங்கு, பாத்தையராக இருக்க இடந்தராததையும், பலகலை கற்றுவாழவே பாவை விரும்புவதையும் அம்மங்கையிடம் கூற, "அதுவே முறை! இனி நடனராணியின் உறைவிடம் நமது அரண்மனையே" என்று கூறி, அவளைத்தன்னுடன் இருக்கச்செய்தாள். நடனராணியை வீரமணி நெடு நாட்களாகவே நேசித்துவந்தான். அவள் அரண்மனைக் குவந்து சேர்ந்தபிறகு, அடிக்கடி சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. கண்கள் பேசின. கனிந்தது காதல். "கண்டவர் சரியே" என்றனர். கேட்டவர் "முறையே" என்றனர். நடனராணியின் நற்குணம் நாடெங்கும் தெரியும். வீரமணியின் திறமும் வேந்தரும் மாந்தரும் அறிவர். ஆற்றலும் அழகும் ஆரத்தழுவலே முறை என்று ஆன்றோர் கூறினர். வீரமணியின் தாய்மட்டுமே பாத்தையரிலே தானா என்பாலனுக்குப் பாவைகிடைத்தாள். குன்றெடுக்கும் தோளான் என்மகன், குறுநில மன்னன் மகள் அவனுக்குக்கிடைக்காளோ, என்று கவலையுற்றாள். ஆனால், வீரமணி, நடனராணியிடம் கண்டகவர்ச்சியை அவனன்றே அறிவான்.

இருண்டு சுருண்ட கூந்தல், பிறைநுதல், சிலைப் புருவம், நெஞ்சைச் சூறையாடும் சுழற்கண்கள், அரும்புபோன்ற இதழ், முத்துப்பற்கள், பிடி இடை, இவைகண்டு, கரும்புரசமெனும் அவள் மொழிச்சுவை உண்டு, கண்படைத்தோருக்குக் காட்சியென விளங்கும் நடனநேர்த்தியைக்கண்டு, மையல்கொண்ட வீரமணி, நடனராணியிடம் நெருங்கிப் பழகியதும், சித்திரம் சீரிய குணத்தின் பெட்டகமாகவும் இருப்பதையும், கருத்து ஒருமித்திருப்பதையுங் கண்டு களிகொண்டு, அவளையன்றிப் பிறிதோர்மாதைக் கனவிலுங்கருதேன் என்று கூறிவிட்டான். மணவினையை முடித்துக்கொள்ளாததற்குக், காரணம், தாய்காட்டிய தயக்கமல்ல! தாய் தனயனுக்குக் குறுநில மன்னனின் மகள்தேட எண்ணினாள், தனயனோ, கோமளவல்லிக்கு மணவினைப்பரிசாக வழங்க குறுநிலம் தேடினான், அதற்காகக் கொற்றவனிடம் தான் கற்றவித்தை யத்தனையும் காட்டிச் சேவைபுரிந்து வந்தான். நடனராணியின் வாழ்க்கை நல்வழியிலே அமைய இருப்பதுகண்டு, களித்து, பதுமாநிம்மதியாகவே நீங்காத்துயிலுற்றாள்.

பூங்காவிலே, நடனராணி, புதிதாகச்சேடியாக அமர்ந்த ஓர் ஆரியக்கன்னியிடம், தமிழர் சிறப்புப் பற்றி எடுத்துக் கூறிக்கொண்டிருந்தாள். கங்கைக் கரையிலே தனது இனத்தவர் கனல்மூட்ட ஓமத்தீ மூட்டுவதை ஆரியக்கன்னி உரைத்திட, நடனமணி எம்மவரின் ஓமம் எதிரியின்படை வீட்டைக்கொளுத்துகையில் கிளம்பும் என்றுரைத்து மகிழ்ந்தாள்.

"சகல கலைவல்லவளே! பேச்சு போதும், பந்தாடுவோம் இனி" என்று அம்மங்கைகூறிட, பாவையர், பந்தாடலாயினர். உற்சாகமற்றிருந்த நடனராணியின் உள்ளத்தையும் பந்தாட்டம் குளிரச்செய்தது. கைவளைகள் கலீல் கலீல் எனஒலிக்க, காற்சிலம்புகள் கீதமிட, கூந்தல் சரிய, சூடியபூ உதிர, மகரக்குழை மாறாட்டமாட, இடைதிண்டாட, 'மனமுந்தியதோ, விழிமுந்தியதோ, கரம் முந்தியதோ' என்றுகாண்போர் அதிசயிக்கும்விதமாக, பாவையர் பந்தடித்துக் களித்தனர். பூங்கொடிகள் துவளத்தொடங்கின. வியர்வை அரும்பினதுகண்ட மன்னன் மகள், "பந்தாடினது போதுமடி, இனிவேறோர் விளையாட்டுக் கூறுங்கள். ஓடாமல் அலுக்காமலிருக்கவேண்டும்" என்றுரைத்திட, நடனராணி, "பண் அமைப்போமா?" என்று கூற, ஆரியமங்கை, "பதம் அமைப்போம்" என்று கூற, சரிஎன இசைந்தனர். ஒருவர்ஒருபதத்தைக்கூற அதன் ஓசைக்கேற்பவும் தொடர்பு இருக்கவுமான பதத்தை மற்றவர் இசையுடன் உடனே அமைத்திட வேண்டுமென்பது அவ்விளையாட்டு. சிந்தனைக்கேவேலை. சேயிழையார் சுனையில்துள்ளும்மீன்போல், சோலையில் தாவும் புள்ளிமான்போல் தாவாமல் குதிக்காமல் விளையாட வழி இதுவே.

அம்மங்கை துவக்கினாள் பதம் அமைக்கும் விளையாட்டினை. நடனராணியும் ஆரியமங்கை கங்கா பாலாவும் அதிலே கலந்துகொண்டனர். மற்றையத் தோழியர்; வியந்தனர்.

அம்மங்கை:—நாட்டி
நடனராணி:—இணைவிழிகாட்டி
கங்கா:—இளையரை வாட்டி
அம்மங்கை:—மனமயல் மூட்டி
நடனராணி:—இசைகூட்டி
கங்கா:—விரகமூட்டி

இதைக் கேட்டதும் நடனராணி, "விரக மூட்டி" என்றதற்குப் பதில் இன்பமூட்டி என்று கூறுவதே சாலச் சிறந்தது என்றாள்." "விரகம் விசாரம். அது வேண்டாமடி கங்கா. அது நடனாவுக்கு நோயூட்டும். வேறு கூறு" என்று அம்மங்கை கேலி செய்தாள். "எனக்கொன்று மில்லை யம்மா. ஆகட்டும் கங்கா, நீ துவங்கிடு இப்போது" என்றாள்நடனம்.

கங்கா:—சரசமொழி பேசி
அம்மங்கை:—வளை அணி கை வீசி
நடனம்:—வந்தாள் மகராசி!

என்று கூறி, கங்கா பாலாவைச் சுட்டிக்காட்டிச் சிரித்தாள்.

"நீங்கள் இருவருமே பதம் அமையுங்கள். நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். பார்க்கலாம் உங்கள் சமர்த்தை" என்று அம்மங்கை கூறினதால், ஆரிய மங்கையும் ஆட லழகியும் பதமமைக்க லாயினர்.

நடனம்:— மாலையிலே
கங்கை:— மலர்ச்சோலையிலே
ந:— மாங்குயில்கூவிடும் போதினிலே

(7-ம் பக்கம் பார்க்க)

காஞ்சி நிதி லிமிடெட்.

காஞ்சிபுரம்

29-வது ஸீரிஸ் ரூ. 500, 250, சீட்டுகள் 25—7—42ல் ஆரம்பிக்கப்படும் சந்தாதாரர்களாக சேர விரும்புவோர்கள் உடனே விபரங்களுக்கு எழுதவும்.

K. R. CHARY, B. A., Secretary.

திராவிடநாடு

ஞாயிறு] 26—7—42 [காஞ்சி.

கண்ணன் காட்டிய வழி!

"குருக்ஷேத்திரத்தில் கர்னனின் ரதம் பூமியில் சிக்கிக்கொண்டு விட்டது. கர்னன் கீழே இறங்கி அதைச்செப்பனிட்டுக் கொண்டிருந்தபோதும் அர்ச்சுனன் விடாமல் பாணங்களை வர்ஷித்துக்கொண்டேயிருந்தான். இது தர்மமா? என்று கர்னன் கிருஷ்ண பகவானைக்கேட்டான். "துர்யோதனனுடன் சேர்ந்து கொண்டு நாள்தவறாமல் அதர்மகாரியங்களையேசெய்து கொண்டிருந்த உனக்கு என்ன தர்மம் புரியும்" என்று பகவான் பதிலளித்தார்."

'பகவான்' அளித்த இந்தப்பதிலை, 'பாரததேவி,' டெயிலிஹெரால்டு என்ற, பிரிட்டிஷ் பத்திரிகைக்கு அளித்து, கர்னன் இதுதர்மமா? என்று கேட்டது போல், ஹெரால்டு கேட்பதாகக் கூறுகிறது.

டெயிலிஹெரால்டு, பிரிட்டிஷ் தொழிற்கட்சிப் பத்திரிகை. பிரிட்டிஷ் தொழிற்கட்சியைக் காங்கிரஸ் தூபதீப நைவேத்தியமிட்டுத் தொழுதுவந்தது. பிரிட்டிஷ் தொழிற்கட்சி மட்டும் அதிகாரத்தில் அமர்ந்தால், அடுத்த தபாலிலே,—விமானத்தபால்போலும்—சுயராச்யம் இந்தியாவுக்கு அனுப்பப்படும், முகவரி, காந்தி, வர்தா, என்றிருக்கும் என்று காங்கிரஸ் மனப்பால் குடித்துவந்தது. இப்போது அந்தப் பித்தம்தெளிய மருந்துகிடைத்திருக்கிறது. காங்கிரஸ்துவக்கப் போவதாகக்கூறும் சண்டித்தனத்தைக்கண்டித்து ஹெரால்டு எழுதியிருக்கிறது, காரசாரமாக, கனல்எழ! உங்களுக்காக வாதிட்டுவந்த எங்களைக் காட்டிக்கொடுக்கும் தோழர்களே! என்று அர்ச்சித்துவிட்டு, பாட்டாளி மக்களைப் பாழ்படுத்தும் போக்கிலே, நாற்புறமும் ஆபத்து சூழ்ந்துள்ள வேளையிலே, நாட்டிலே குழப்பத்தை விளைத்து, நாசகால நாஜியருக்கும் ஜப்பானியருக்கும் நாட்டைக் காட்டிக்கொடுக்கத் துணிகிறீர்களே, இதுதர்மமா? என்று ஹெரால்டு கேட்கிறது. இந்த இடி, தேவியின் மூளையைக் குழப்பித்தான்விட்டது! எனவே, பாரதத்தைப் பரணியிலிருந்துஎடுத்து, குருக்ஷேத்திர களத்தைத் தேடிப்பிடித்து, தேரைப் பழுதுபார்த்துக் கொண்டிருக்கும் கர்னனை, பாணங்களால் தாக்கிய பார்த்திபனும், அவனுக்குத்தேரோட்டிய கண்ணனும், கண்ணன் கர்னன் சம்வாதமும், கண்ணன் தந்தபதிலும், ஆகியவற்றினைக்கூறி, அன்று கர்னனுக்குக் கண்ணன் என்னபதில் கூறினானோ, அதே பதில்தான் நான் உனக்குக்கூறுகிறேன் என்று தேவி கூறுகிறாள். கண்ணன் காட்டிய வழிசெல்வதே கடமை என்பது காந்தீயர்களின் கோட்பாடல்லவா! தேவியும் அதிலேயே திருஷ்டி உள்ளவள்! காந்தீயர்களுக்குக் கண்ணன் காட்டியவழி பிடிப்பதிலே நமக்கு ஆச்சரியமேற்பட்டதில்லை. கண்ணன்காட்டியவழி வர்ச்சிமிக்கது. பாலபருவத்திலே பால் தயிர் வெண்ணெய், காளைப்பருவத்திலே கட்டழகிகளான கோபிகைகள், பிறகு, ராஜதந்திர ரசக்கூடம், இவை அவர்காட்டிய வழிகள். பலருக்கு ஆனந்தமேதரும் இந்தவழிகள். ஆனால், அவருடைய தர்மோபதேசத்தை எடுத்துக் கூறும்போது, நாம் தாங்கொணக் கோபமே கொள்வோம். ஏன்? சூதுக்கும், அவர்கூறினதற்கும் சொல் அமைப்பிலே வித்யாசமுண்டேயன்றி, சூக்ஷமத்திலே வித்யாசம் கண்டோமில்லை.

களத்திலே தேர் கெட்டுவிட்டது! கர்னன் தேரைச் செப்பனிடுகிறான். அந்தவேளையிலே அவன் மீது கணைதொடுக்கிறான், கன்னியர் வேட்டையில் கை தேர்ந்த அர்சுனன். இது ஆண்மைக்கு அத்தாட்சியா, அன்றி விராடநகரிலே அர்ச்சுனன் அணிந்திருந்தபேடி உருவம் மாறியும், உள்ளம் அத்தன்மையதாகவேஇருந்ததுஎன்பதைக் காட்டுகிறதா என்று இதிகாசப்புலமைமிக்கோரேனும் பதில்கூறட்டுமே பார்ப்போம். அந்தசெயலைக்கண்ட கர்னன் கண்ணனைக்கேட்கிறான், இதுதர்மமா என்று. அங்கே உள்ள வீரத்தைத்தான் மின். போரிடும் அர்ச்சுனனைக்கேட்பது வீரன் எதிரியிடம் வேண்டிக்கொள்வதாகும், ஆண்மைக்கு அது அழகாகாது என்று, நான் யாவருக்கும் பொது, நான் சகல வேதமும் உணர்ந்தோன் என்று பேசிக்கொள்கிறாயே, கண்ணா! இதுதர்மமா, நீயேகூறு, என்று கலங்காஉள்ளம் படைத்தவன் கேட்கிறான்.

நீ துரியனுடன்சேர்ந்து துர்க்கிருத்யங்கள்செய்து வந்தவன், உனக்குத் தர்மம் என்னதெரியும் என்ற சொல்லம்மை விடுகிறார் கண்ணன்! எந்தக்கண்ணன்? கர்னன், பாண்டவ புதல்வன் என்பதைத்தெரிந்து அவனுக்கும் தெரிவித்து ஆனால் பாண்டவரிடம் அதைக் கூறாது மறைத்துவைத்த கண்ணன். வேதியவடிவோடு அவனிடம்போய், கவசகுண்டலங்களைத்தானம் வாங்கிய கண்ணன், உனக்குத் தர்மம் என்னதெரியும் என்று, தோழனுக்குத் துரோகம் செய்யேன்! கூடப்பிறந்தவருடன் இன்று கூடிக்கொண்டால், இதுவரைஆதரித்த துரியனுக்குத் தீங்கிழைத்தவனாவேன், அதுகூடாது கேட்போருக்கு இல்லையெனாது தருவேன், என்புண்ணியம் வேண்டுமா கவசகுண்டலம் வேண்டுமா, எதைத் தருவதாக வாக்களித்தேனோ அதைத்தர அட்டியில்லை என்று கூறிடும், இத்தனை தர்மங்களைத்தெரிந்து, அதன்படி நடந்து, வீரர்க்கோர் விளக்கெனவும், நட்புக்கோர் எடுத்துக்காட்டாகவும், வள்ளல்தன்மைக்கு வைரமணி போலும் விளங்கிய கர்னனை போர்க்களத்திலே அதர்மமான முறையிலே கணைவிட்ட அர்சுனனுக்குத் தேரோட்டியதுடன், உனக்கு என்னதர்மம் தெரியும்? என்று, கேட்டார் கண்ணன். இது மனித நீதிப்படி சரியா என்பதை நேயர்கள் யோசிக்கக் கேட்டுக்கொள்கிறோம், அன்று அவர் அளித்த பதில், நேரடியானதுமல்ல, நேர்மையானதுமல்ல, நெஞ்சில் இரக்கமற்றது, நயவஞ்சகம் குடிகொண்ட உள்ளத்திலிருந்து கிளம்பியநச்சுமொழி. அதனையே பாரததேவி, ஹெரால்டுக்குப் பதிலாகத் தருகிறது. வேறுஎப்படி இருக்கமுடியும்! இனப்பண்பு இலேசில் போகாது! அன்று தொட்டு இன்றுவரை உள்ள ஆரியநோக்கு, அப்பழுக்கின்றித்தானே இருக்கிறது. ஆனதுபற்றியே, ஆங்கில ஏடு, நாட்டுக்கு ஆபத்தைத் தேடுகிறாயே நண்பா, இது தர்மமாஎன்று கேட்க, உனக்கென்னதர்மம் தெரியும் என்று பாரத தேவி பதைத்துக்கேட்கிறது. பொருளுமில்லை, அறிவுமில்லை, அதன் பதிலிலே! கேட்டகேள்விக்கு, வசையையே பதிலாக அளிக்கிறது. தேம்புவதும் திட்டுவதும் தேவியின் திருக்குணம் போலும்!

ஹெரால்டுக்குத் தர்மம் தெரியவில்லை என்றே வைத்துக்கொள்வோம், காங்கிரஸின் காதலைப் பன்முறை பெற்றவராம், காந்தியாரிடம் இன்றும் மதிப்புக்

கொண்டசாம், நளினிரஞ்ஜன் சர்க்கார், அவர்கொடுத்திருக்கிறசோசாட்டை அதற்கென்ன செய்வாய் அம்மையே! அமெரிக்காவிலே அபிமானம் தோன்றினால் நாட்டுக்கு யோகம் சித்திக்கும் என்று கூறினாயே, இதோ அமெரிக்கப் பத்திரிகைகள் அவ்வளவும் காந்தியாரின் போக்கைக் கண்டித்து விட்டதுடன், இந்தக் குற்றத்தை நாங்கள் மன்னிக்கவே மாட்டோம் என்று எழுதிவிட்டனவே, இந்த இடிக்கு எந்த மருந்துண்டு தேறப்போகிறாய்! என்று கேட்கிறோம்.

முஸ்லீம் லீக்முரசு, **டான் “காங்கிரசிலே ரஸ்புடினிசம் (மாயாஜாலப் பரதேசியனப்பான்மை) மேலோங்கி இருக்கும் வரையில், காங்கிரஸ் நன்னெறியைக் கடைப்பிடிக்குமென்றோ, யோக்கியமான வழியில் செல்லுமென்றோ நம்பிக்கை கொள்வதற்கில்லை. காங்கிரஸ், மூடநம்பிக்கை, மோசடி ஆகியவற்றினால் ஊட்டிவளர்க்கப்பட்டது. நயவஞ்சகமெனும் குருதியே அதன் நாடிநரம்புகளிலே ஓடுகிறது”**—என்று 19-ந் தேதி எழுதுகிறது. இதுதான் சரியான, தெளிவான படப்பிடிப்பு! கண்ணன் கதையும் கர்னன் வதையும் கூறிக்கண்கசக்குவதை விட்டு, இந்தக் கண்டனத்தைக் கேள் தேவி, நெஞ்சில் வீரமிருப்பின் பதில் கூறு! ரஸ்புட்டினிசம் காங்கிரசிலே குடிகொண்டில்லையா! அவர் ஓர் அவதார புருஷர், ஆஸ்ரமத்திலேயே இருப்பார், ஆரஞ்சுரசமே பருகுவார், அணங்குகளே அந்த அரை ஆடை அண்ணலின் அருகிருந்து உபசாரம் செய்வார், அவரிடம் அந்தராத்மா வந்து வந்து பேசும் என்ற இந்த வர்ணனைகளை, அவருடைய முகத்திலே யாரிடமும் காணமுடியாத தேஜஸ்தாண்டவமாடுகிறது, அவர் கண்களின் ஒளி பட்டதும் பாவங்கள் பஸ்மீகரமாகிறது, பாவையர் அவரிடம் காட்டும் பாசமோ சொல்லிமுடியாது, பரமனின் பிரதிபிம்பமே அவர், என்று ஜார்காலத்திலே ரஸ்புட்டினைப்பற்றி வர்ணிக்கப்பட்டதற்கும், வித்யாசமிருக்கிறதா!

இந்தியரஸ்புடீனின் போக்கைக் கண்டிக்காதவர் யார்! சர். நான் கொடுத்தார் சரியான சவுக்கு! டாக்டர் அம்பெத்கார் காந்தியாட்டத்தைக் கண்டதுண்டமாக்குகஎன்று கர்ஜனை செய்கிறார், இந்த வீண்விளையாட்டை நிறுத்துமய்யா, விபரீதம் விளையுமுன் என்று ஜனாப் ஜின்னா எச்சரிக்கை விடுத்திருக்கிறார், வடநாட்டு முதலாளிகளின் கைப்பாவையின் இந்தகோணற்கூத்தை அடக்கியே தீரவேண்டும் என்று **பெரியார்** கூறுகிறார், இவர்கள், இனதர்மம் தெரிந்தவர்கள், உன் இனமும் அதன் இயல்பும், அன்று முதல் இன்றுவரை ஆரிய இனம், நாட்டுக்கோர் நெருக்கடி என்றதும், நரிக்குணங்கொண்டு, இரத்தம் உரிய நடமாடியவரலாறும் நன்கு அறிவர். அவர்களின் கேள்விகளுக்குப்பதில் கூறு பார்ப்போம், அதையுங்கேட்போம்!

பிரிட்டிஷ் சர்க்கார்மட்டும், அதன் சட்டமுனைகளை உனக்கு அபயஸ்தமாக்காது இருப்பின், காங்கிரசே காந்தீயமே, உனது கல்லறைமீது புல்முளைத்துப் போயிருக்கும். இன்றுங்கூட, நாட்டுக்கே கேடுவரும் காரியத்தைச் செய்யத்துணியும் காங்கிரசை, உங்கள் இஷ்டப்படி அடக்கி, நாட்டை பஞ்சாங்கப்படையிடமிருந்து மீட்டுக்கொள்க, என்று ஒருவார்த்தை பிரிட்டிஷ்சர்க்கார் கூறி, நாட்டை உள்நாட்டுக்குழப்பத்தினின்றும் காப்பாற்றும் பொறுப்பை லீக்—திராவிட கூட்டுப்படையிடம் ஒப்புவித்துவிட்டால், நொடியிலே உன் கொட்டம் அடக்கப்பட்டு விடும், என்று காங்கிரசுக்கு, நாம் கூறுகிறோம்.

பிரிட்டிஷார் மீதுள்ள கோபம், இன்றைய காங்கிரஸ் திட்டத்துக்குக் காரணமல்ல! நாட்டிலே, இன எழுச்சி ஏற்பட்டுவிட்டது, அதனைத்தடுக்கவேண்டும், பிரிட்டனைமிரட்டி இந்துக் காங்கிரசாட்சி நிறுவவேண்டுமென்பதே காங்கிரசின் நோக்கம். இது ஈடேறாது என்றபோதிலும், சலசலப்புச் செய்துபார்ப்போம், கிடைத்தவரையில் இலாபம் என்ற முறையிலே காந்தியார் கிளம்புகிறார், பார்ப்போம் அவரது ஆட்டத்தின் போக்கை!

கலிங்க ராணி. 5ம் பக்கத் தொடர்ச்சி.

க:— மதிநிறை வதனீ!
ந:— இதழ் தருபதனி
க:— பருகிடவரு குமரன்
ந:— குறுநகையலங்காரன்.
க:— குண்டல மசைந்தாட
ந:— கோமளம் விரைந்தோட
க:— மயில்கள் ஆட
ந:— மகிழ்ந்த நாடா

“சரியான மொழி! நடனத்தின் நிலை இதுதான் இப்போது” என்று அரச குமாரி கேலி செய்தாள்.

“கடைசியில் என்னைக் கேலி செய்யத்தானா தேவிஇந்த விளையாட்டு” என்றாள் நடனராணி. “கேலியல்லவே இது” என்றுகூறிக் கன்னத்தைக் கிள்ளி காவலன் குமரி, மற்றொன்று ஆரம்பி பாலா என்று பணித்தாள்.

கங்கா:—பூங்காவில் பார் அரும்பு
நடனம்:—பூவையருக்கே அது கரும்பு,
கங்கா:—மணமில்லையேல் வேம்பு

என்று கூறினாள், தன்னை மீண்டும் கேலிசெய்வதைத் தெரிந்துகொண்ட நடனம், “பாய்ந்து வருகுதே பாம்பு” என்று கூறினாள். பாம்பு என்றதும், கங்காபாலா, பயந்து எங்கே எங்கே என்று அலறினாள். நடனம் சிரித்துக்கொண்டே, “பதத்திலே பாம்பு, நிசத்தில் அல்ல” என்று கூறிக் கேலி செய்தாள். எல்லோரும் கை கொட்டி நகைத்தனர். கங்காபாலா வெட்கித் தலை குனிந்தாள். அதே சமயம் கணீர் கணீர் என்று அந்தப்புறத்து மணி அடிக்கப்பட்டது. ஏன்? என்ன விசேஷம்? மணி அடித்த காரணம் என்ன? என்று கூறிக்கொண்டே, பாவையர், அந்தப்புறத்தை நோக்கி ஓடினர். (தொடரும்)

காஞ்சியில் ஆகஸ்ட் 30, 31.

தோழர்களே! ஆகஸ்ட் 30 ந் தேதி, ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்கு காஞ்சீபுரம் தோழர் A. K. தங்கவேலரின் புதல்வன். தோழர் சாம்பசிவத்திற்குத் தமிழ்முறையிலே திருமணம். மாஜி மந்திரி தோழர், S. முத்தைய முதலியார் அவர்கள் C. I. E. திருமணத்தை நடத்திவைப்பார்கள்.

அன்றுமாலை. 4மணிக்கு ரயில்வே ரோடிலே புதிதாகக் கட்டப்பட்டுள்ள **கந்தன் பார்க்** திறப்பு விழா நடைபெறும் அதே இடத்திலே **தங்கவேலர் கிளப்**, முனிசிபல் கமிஷனர் தோழர் மீனாட்சி சுந்தரம் அவர்கள் திறந்துவைப்பார்கள்.

திங்கட்கிழமை காலை 9 மணிக்கு. கண்ணன்டாகீஸ் கட்டடத்தில், திராவிடநாடு பிரிவினைக்கமிட்டிக் கூட்டம் தோழர் S முத்தைய முதலியார் தலைமையில் நடைபெறும்.

மாலை 6 மணிக்கு, ஆடிசன் பேட்டையில், பெரியார், முத்தைய முதலியார் ஆகியோர், **தமிழரும் எதிர் காலமும்** என்பதுபற்றிச் சொற்பொழி வாற்றுவர்.

தோழர்கள் தண்டபாணி தேசிகர், கீவளூர் மீனாட்சிசுந்தரம், திருவாரூர் நமச்சிவாயம் இசை விருந்தை இரு தினங்களும் அளிப்பார்கள். திருமணத்தின்போது திருவாவடுதுறை தோழர் சத்திவேல் நாதஸ்வர மேளக்கச்சேரி நடைபெறும்.

அன்பர்கள் அனைவரும் வருக!

C. N. A.

போர்க் களங்களில்!

வாரனேசுப் போர்முனையில் நாஜிப் பிணமலைகள் காட்சி தருகின்றன. அங்கு ஜெர்மன் படைகள் ஆபத்தில் சிக்கி இருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

* * * *

சில நாட்களுக்கு வாரனேசு முனைக்கு நாஜிகளுக்கு உதவியாக கொண்டுவரப்பட்டிருந்த ஹங்கேரிய படை படுதோல்வி அடைந்து இத்தாலியர்களைப்போல சிதறி ஓடினர். இப்பொழுது ருமேனியப் படைகள் அங்கு அனுப்பப்பட்டுள்ளனவாம். இவற்றின் கதி பின்னர் தெரியும்.

* * * *

டான் நதி இரத்த ஆறாக ஓடுகிறது. அதற்கு மேற்கே, வாரனேசுக்கு வடமேற்குப் பாகத்தில் ஜெர்மன் அரணிப்புகளை சோவியத் படையினர் துளைத்து, நாஜிகளை டான் நதிக் கரையோரமாகத் தென் திசைக்கு நிலைகுலைந்து ஓடச்செய்தனராம். ஓடிச்சென்ற ஜெர்மானியரை இன்னொரு ரஷியப்படை வழிமறித்து தாக்கினதாம், இருபுறமும் தாக்கப்பெற்ற நாஜிகள் பயங்கர சேதம் அடைந்திருப்பர் என்பதில் சந்தேகமில்லை.

* * * *

சென்ற ஒன்பது வாரப்போரில் 3000 ஜெர்மன் டாங்கிகள் அழிக்கப்பெற்றன. அப்படி இருந்தும் நாஜிகள் தெற்கு முனையில் ஏராளமான டாங்கிகளையும், விமானங்களையும் கொண்டுபோய் சேர்த்த வண்ணமாய் இருக்கிறார்கள்.

* * *

டான்நதிப்போர்க் களத்திலே சில இடங்களில், ஜெர்மனியர் விமான மூலமாக துருப்புகளை கொண்டுபோய் இறக்கினார்களாம். பின்வாங்கிய ரஷியப் படைகளினிடை குழப்பம் விளைக்கச் செய்த இந்த முயற்சி பலிக்கவில்லை. வாரனேசு முனையின் வடமேற்குப் பகுதியில் கடல் விமானங்களில் வந்து பராசூட் குடை மூலமாக தரையில் இறங்க முயன்ற நாஜிகள் எல்லோரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.



புது அமைப்புகளுள்ள பிரிட்டிஷ் டாங்கி.

* * * *

அட்மிரல் லீஹி அமெரிக்க இராணுவ காரியாலயத்தின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நியமனத்தால் அமெரிக்க இராணுவத்தின் தலைமைதளபதியான பிரசிடெண்ட் ரூசிவெல்டுக்கு இதுவரை இருந்துவந்த காரியாலய தொல்லைகள் குறையும்.

* * * *

அலூசியம் தீவுகளுக்கு அருகில் மூன்று ஜப்பானிய போர்க்கப்பல்கள் மூழ்கடிக்கப் பெற்றன.

* * * *

சென்ற திங்கட்கிழமை பர்மா அக்கியாப் மீது பிரிட்டிஷ் விமானங்கள் படையெடுத்துச் சென்று ஜப்பானியப் படைகள் இருக்கும் இடங்கள்மீது குண்டுமாரி பொழிந்தன.

* * * *

ஆண்கள், பெண்கள் குழந்தைகள் உள்பட ஏறக்குறைய 28,000 யூதர்கள் பாரிஸ் நகரத்தில் நாஜிகளால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

சீனர்கள் இரும்புப்பிடித்த வெஞ்சோ, நகரத்தை ஜப்பானியர் மீண்டும் கைபற்றி விட்டனராம்.

* * * *

யுத்தத்துக்குப் பின் இப்பொழுது அச்சுநாடுகளின் ஆக்கிரமிப்பு உள்பட்டிருக்கும் நாடுகளில் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்ட 10 லட்சம்பேர் கொண்ட படைகள் வேண்டியதாய் இருக்கும் என்று அமெரிக்க சர்க்கார் திட்டம் போட்டிருக்கிறார்கள்.

* * * *

பெருந்தொகையான சப்மரீன்களையும், மோட்டர் டார்பிடோ படகுகளையும் சேகரித்து ஜெனரல் பிராங்கோ ஸ்பானிய கடற்படையைப் பலப்படுத்துகிறாராம்.

* * * *

சீனாவில் கட்டாய இராணுவசேவைத் திட்டம் அமுலுக்கு வந்துவிட்டது. ஆண்டுக்கு 20லட்சம்பேர் வீதம் இன்னும் மூன்று ஆண்டுகளில் மொத்தம் 60 லட்சம் சீனப்படைகள் திரட்டப்படுமாம்.

* * * *

வாரனேசு முனையில் போர், இறுதிக் கட்டத்தை அடைந்து விட்டது. டான்நதியின் வடபாகத்திலுள்ள முக்கிய பாலங்களை எல்லாம் நாஜிகளிடமிருந்து ரஷியப்படைகள் திரும்பக் கைப்பற்றிவருகின்றன.

* * *

வடகடலில் ரஷியத் துறை முகம் ஒன்றைத் தாக்கச் சென்ற ஜெர்மன் விமானப் படை ரஷிய சண்டைவிமானங்கள் வந்து எதிர்க்கவே கொண்டுவந்த வெடி குண்டுகளை கடலில் வீசிவிட்டு ஓடிப்போயின. அந்தப்போரில் எட்டு நாஜி வெடி விமானங்களும் ஒரு சண்டை விமானமும் சுட்டு வீழ்த்தப் பெற்றன. ரஷிய விமானங்களுக்கு சேதம் இல்லை.

* * * *

நாஜி முன்னேற்றத்தை தடுக்க புதிய ரஷியப் படைகள் தயாராய் காத்து நிற்கின்றன. குறித்த வேளையில் அவை மார்ஷல் டிமோஷெங்கோவின் படைகளுடன் வந்து கலந்துகொள்ளும் என்று தெரிகிறது.

* * * *

அமெரிக்க வெடி விமானங்கள் பட்டப்பகலில் டோப்ருக் மீது குண்டுமாரி பொழிந்தன. அமெரிக்க விமானப் படைக்காக பிரிட்டிஷார் எகிப்தில் விமான தளங்கள் கட்டுகிறார்கள்.

* * * *

பிரிட்டிஷ் "ஸ்பிட்பயர்" வெடிவிமானங்கள் பிடிபட்ட நாடுகளிலுள்ள நாஜி இராணுவ இடங்கள் மீது தாழப்பறந்து தாக்கின. ஜெர்மன் பீரங்கி நிலையங்கள் கவச வண்டிகள் முதலிய போர்க்கருவிகள் சேதம் அடைந்தனவாம்.

* * * *

எகிப்து போர்முனையில் சென்ற 10 நாட்களாகப் பிரிட்டிஷார் கை மேலோங்கி நிற்கிறது.

இருவீரர் ஒருதாசர்!

2-ம் பக்கத் தொடர்ச்சி.

ஆரம்பமானதும், ஒரு காலநிர்ணயம் செய்து இதற்குள் சுயராச்யம் தரப்போகிறீர்களா? இல்லையேல் நாங்கள் யுத்தத்தை எதிர்க்கட்டுமா என்று பிரிட்டிஷாருக்கு எச்சரிக்கை, இறுதி அறிக்கை விடவேண்டும் என்று கூறினார், கபோதித்தனம் அவரது யோசனையிலே இருந்ததென்ற போதிலும் கொஞ்சம் கண்ணியமாவது காணப்பட்டது. காந்தியார் இப்போது கூறுவதிலே, கபோதித்தனமிருப்பதுடன், கண்ணியம் சூன்யமாக இருக்கக் காண்கிறோம்.

ஜெர்மனி, ரஷியாவிலே இராணுவ முக்கியத்துவமுள்ள இடங்களைப் பிடித்ததும், சைபீரியா மார்க்கமாக, ஜப்பான் தனது படைகளைக் கொண்டு ரஷியாவைப் பின்புறமாகத் தாக்குவதென்ற இரகசிய ஏற்பாடு ஜெர்மனிக்கும் ஜப்பானுக்கும் இருப்பதாக ஒரு வெளிநாட்டுப் பத்திரிகை எழுதுகிறது. வெறும் சரடாக இருக்கக்கூடும், ஊகமாக இருக்கலாம். ஆனால், காந்தியாரின் திட்டம், ரஷியாவிலே நெருக்கடி இருக்கும் நேரமாகப் பார்த்துத் துவக்கப்படுவதைப் பார்த்தால், ஜெர்மனிக்கும் ஜப்பானுக்கும் இரகசிய ஒப்பந்தம் இருப்பதாக எண்ணுவதைவிட அச்சுநாட்டுக்கும் காந்தியாருக்கும் ஒப்பந்தம் இருக்குமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. ரஷியாவிடம், கொஞ்சமும் அனுதாபமற்று, ரஷியக் கோட்பாட்டைவைரி எனக்கொண்டு சமதர்மிகளைப் பரமவிரோதிகளாகப்பாவிக்கும் ஒரு புண்ணிய புருஷர் இந்நாட்டிலே, **காந்தியார்** என்பது சகலருக்கும் தெரிந்ததே. காந்தியார் அதனை மறைக்கவுமில்லை, பெருமையாகவே பேசிக்கொள்கிறார். ஆகவேதான் அவர், இந்தச் சமயத்திலே "போர்க்" கோலம் பூண்டு வெளிவரப் போவதாகக் கூறினார். காந்தியாருக்கு ரஷியாவிடம் உள்ள கோபத்துக்கும் துவேஷத்துக்கும் காரணம், காந்தியார், இந்நாட்டு முதலாளித்துவத்தின் முதல் நம்பர் ஏஜண்ட், ரஷியக்கொள்கை அதற்கு வைரி! எனவே, ஹிட்லருக்குள்ள கோபத்தைவிடக், காந்தியாருக்குச் சமதர்ம ரஷியாவிடம் கோபம் பொங்குகிறது, சீறுகிறார், துடிக்கிறார், தொல்லை கொடுக்க, குழப்பம் விளைவிக்க. தீவிரவாதிகளே! சமதர்மிகளே! பாட்டாளி மக்களே! உங்கள் கடமை என்ன? ரஷியாவிலே நடக்கும் போர், உலக எதிர்காலத்தை நிர்ணயிக்கும் போரல்லவா! அங்கு இன்று சிந்தப்படும் இரத்தம், உலக எதிர்காலத்திற்காக! ரஷியர்கள் வீழ்ந்தால், பாட்டாளிமக்களே! பலகாலும் நாம் பாடி ஆடிக் களித்த சமதர்மம் இல்லை! ஏழையென்றும் அடிமை என்றும் எவனுமில்லை என்றுரைக்கும் சக்தி இல்லை! ஓட்டப்பர் ஆவோம், இது உறுதி! உலக ஏழைகளின் இருதய ஒலிதானே சமதர்மம்! அதன் சித்திரமன்றோ சோவியத் ரஷியா! அதை அழிக்கவன்றோ சுவஸ்திகக் கொடியோன் துள்ளுகிறான்! அவனை அடக்கவன்றோ நேசநாடுகள் முனைகின்றன. அவர்கள் நடத்தும் யுத்த முயற்சியைக் குலைக்கவன்றோ காந்தியார், இச்சமயத்திலே போர் தொடுப்பேன் என்று கூறுகிறார்! இது தகுமா? படுகுழியை வெட்டச் செய்து வெட்டுபவரையே அதில் விழச் சொல்லுகிறார்! இதைக் கேட்பதா?

காந்தியாரின் புதியபோர்ப்பாட்டு, வெத்துவேட்டு என்பதைப்பற்றியோ, அது துவக்கினதும் துவண்டு விடும் என்பதையோ, நான் தெரிந்துகொள்ளாமலில்லை. சாதாரணகாலத்திலேயே சரிந்துபோன அவரது சத்யாக்கிரகம் சண்டைகாலத்திலே பூத்ததும் கருகிவிடத்தான் போகிறது! நாட்டுக்கே காங்கிரஸ் ஒன்றுதான் நாயகக்கட்சி என்ற நாளிலேயே, அவரது போர், நடந்து நலிந்து, மெலிந்துமாய்ந்தபோது, நாட்டுக்குரியவன் நானிருக்க, நடுவே வந்தவனே நீ ஏன் நாட்டியமாடுகிறாய்? என்று ஆரியக்காங்கிரசை முஸ்லீமும் திராவிடனும் கேட்கும் இந்நாளிலே, காந்தியாரின் சத்யாக்கிரகம் தத்திவிளையாடி, தலைகீழே சாய்ந்து விடும். கபடக்கருவிலே தோன்றி, கத்தியால் கீறி வெளியாக்கப்பட்டு, கீழே விழுந்ததும் முடமாகி, வளரும்போதே சவலையாகி, பார்த்துக்கொண்டிருக்கையிலேயே குழிபுகும் அக்குழந்தை. அதிலே எனக்குச் சந்தேகங்கிடையாது. ஆனால் காந்தியாரின் சுயசொரூபம் வெளிப்பட இது ஓர் சந்தர்ப்பமாக இருக்கிறது பாரீர் என்பதற்கே இதனைச்சொன்னேன், வேறில்லை.

கனம் ஹக்கின் சினம்

வங்கப் பிரதமமந்திரி பஸ்லுல்ஹக் அவர்களே! வந்தனம். உங்கள் அறிக்கையை நாங்கள் கண்டதும் ஆச்சரியமடைந்ததற்குக் காரணம் பலநாளாய் உங்கள் பல்டிவேலையை நிறுத்திவைத்திருந்த தாங்கள் மறுபடியும் வேலையைத் துவக்கியிருப்பதைக்கண்டு ஆச்சரியமுறுகிறோம். நீங்கள் ஆரம்பித்திருக்கும் முன்போக்கு லீக்கின் திட்டமென்னவென்பதை தெரிய ஆவலுள்ளவர்களாய் இருக்கிறோம். தாங்கள் ஜின்னாமீது சுமத்தியிருக்கும் அபாண்டங்கள் சற்றும் ஆதாரமற்றவை. (சுத்தபுரளிகள்) ஜின்னா உங்கள் கக்ஷியைக் கேட்காமல் தங்களை லீக்கிலிருந்து விலக உத்திரவு இட்டார் என்று சொல்லுகிறீர்கள். அப்பொழுது எத்தனை லீக்காரர்கள் ஜின்னாவை கண்டித்தார்கள்? யாரும் இல்லையே. இதிலிருந்தே நமக்குத் தெரியவில்லையா உங்கள் கட்சிக்காரர்களிடத்து அபிப்பிராயம் வாங்கியே, உங்கள் நடத்தைக் குறிய உத்திரவிட்டார் என்று. தீர்க்கதரிசிகளுக்கு உதித்த ஆபத்துத்தான் எனக்கும் என்று பெருமை யடித்தீர். தீர்க்கதரிசிக்குக் காபிர்கள் ஆபத்து விளைவித்தார்கள். (அதைப்போல் உமக்கு இல்லையே) அந்த காபிர்கள் கூட்டம் தான் லீக் என்று தெரிந்து விட்டீர்களா? ஐயோ பாவம் அதனால்தான் விலகி விட்டீர் போலிருக்கிறது. அந்தக் காபிர்களை. யெல்லாம் இப்பொழுது முஸ்லீம்களாக்க விரும்புகிறீர்களா? அப்படியானால், ஜப்பானுக்காவது ஜெர்மனிக்காவது போய்ப்படை சேர்த்துக் கொண்டுவாரும் முஸல்மானே, உங்கள் முற்போக்குத் திட்டம் முஸ்லீம்களிடையே பிளவு ஏற்படுத்தத்தானா. போகப்போக எப்படி யிருக்குமோ? சந்தேகம் என்ன (அப்பொழுது பின்பல்டி யடிப்பீர்களோ? என்னமோ) தாங்கள் நம்பியிருக்கும் காங்கிரசோ தங்களைப் பல்டியில் பைல்வான் என்று சொல்லியாய் விட்டதே. தங்கள் பல்டியின் தத்துவத்தைப்பற்றிப்பக்கம் பக்கமாய்உதறித்தள்ளி விட்டதே. தாங்கள் பதில் சொல்லாமல் இருக்கும் பொழுதே சுமார் 500 கூட்டம் நடந்ததாமே. பதில் சொல்ல ஆரம்பித்த பிறகு (அதாவது பல்டியடித்த பிறகு) லட்சக்கணக்காய் நடக்கும். உங்கள் முற்போக்கு லீக்குக்குத் தலைவர் நீங்கள் தானா? உங்கள் லீக்கை காக்சார்கள் மோமீன்கள் ஆதரிக்கிறார்களா? அதற்கெல்லாம் பதில் சொல்லுங்களேன் பார்ப்போம். நீங்கள் தான் கோதாவில் இறங்கி விட்டீர்களே காங்கிரஸ் பைல்வான்கள் புடைசூழ!

இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள,

P. K. உம்மர் பேக்,

G. M. கவுஸ்.

[செஞ்சி]

வானம்பாடி வெளியீடுகள்!

பகுத்தறிவூட்டும்

பெரியபுராண ஆராய்ச்சி.

முதல் பாகம் ... 0—6—0.
இரண்டாம்பாகம் ... 0—2—6.
மூன்றும் பாகம் ... 0—3—0

நாலாவது பாகம் அச்சிலிருக்கிறது.

புரட்சிக்கருத்தும்,
தமிழ்ச் சுவையும் தரும்,
பாரதிதாசன் இயற்றிய
எதிர்பாராத முத்தம் 0—8—0

சௌமியன் எழுதிய சமுதாயச் சித்திரம்
குமஸ்தாவின் பெண்தான்!
அச்சிலிருக்கிறது.

ஏஜண்டுகள் தேவை,

கீழ்க்கண்ட இடங்களில் நமது பட்டுகளுக்கு ஏஜென்ஸியை எடுத்து நடத்தத்திறமையுள்ள ஜில்லா ஏஜெண்டுகள் தேவை. ஜில்லா முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்து, சாம்பிள் காட்டி, ஆர்டர் புக் செய்யவேண்டும்.

வாக்குச்சாதுர்யமாகப் பேசுவோரும், நல்ல உழைப்பாளியாயுள்ளோரும், மாதம் ரூ. 150- முதல் ரூ. 500 வரை கண்டிப்பாக சம்பாதிக்கலாம். தகுந்த டிபாசிட் கட்டக்கூடியவர்கள் எழுதவும்.

ஜில்லாக்கள்.

1. திருநெல்வேலி.	7. வடஆற்காடு
2 மதுரை	8 செங்கற்பட்டு
3. திருச்சிராப்பள்ளி	9. கோயம்புத்தூர்
4 தஞ்சாவூர்	10 நீலகிரி
5. இராமநாதபுரம்	11. சேலம்
6. தென்னாற்காடு	12. சித்தூர்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
சில்க் அவுஸ் காசி. (ஸ்தாபித்தது 1909.)

பாஷா சாஹிப் என்கிற B. சையத் காசீம் சாஹிப்,

ஷராப் & நகை வியாபாரம், பெரிய காஞ்சிபுரம்.

நீண்டகாலமாக நாணயமும் நம்பிக்கையும்பொதுஜன நன் மதிப்பும் பெற்றது. எமது கடையில் தற்காலத்திற்கேற்ற புதியமாதிரி சவரப்பொன் ஆபரணங்களும் வேலைப்பாடு அமைந்த எல்லாத் தினுசு வெள்ளிச் சாமான்களும், பஜார் விலைக்குக்கூடுமான வரை சகாயமாகவும் உத்தரவாதத்துடனும் கிடைக்கும்.

சகோதர சகோதரிகளுக்கு, தேவையான எல்லா விதமான ஆபரணங்களையும் குறித்த காலத்தில் குறைந்த கூலியில் சிறந்த முறையில் அனுபவம் வாய்ந்த தொழிலாளரைக் கொண்டு தயாரித்துக்கொடுக்கப் படும்.

தயவு செய்து ஒருமுறை ஆர்டர் கொடுத்து உண்மையை உணரவும்.

Printed at the United Printing Works, Hodgsonpet Conjeeveram.
and Published by C. N. Annadurai, M. A at 51, Nimanthakara Street, L. Conjeeveram.